**கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டப்பகுதி – 02 - 2019.**

---------------------------------------------------------------------------------------------------------

கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டப்பகுதி – 02 இன் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்திற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடிபீ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 யூன் 03 ஆம் திகதிய 3030 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.03 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள் நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம் உள்ளக உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைநிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் கொழும்பு மாநகர சபை மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை என்பன அமுலாக்கல் முகவராக உள்ளன. கொழும்பு பெரும்பாக பகுதியிலுள்ள நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் சேவைகளின் முறைமை வினைத்திறன் மற்றும் நிதிசார் நிலைத்திருக்கும் தன்மையை முன்னேற்றுதல் நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாக உள்ளது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 1230.60 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 9.44 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 1042.88 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 8 மில்லியனை நிதியளிப்புச்செய்வதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி இணங்கியிருந்தது. மிகுதித்தொகையான ரூபா 187.72 மில்லியன் இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிப்புச்செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2014 செப்ரெம்பர் 23 ஆந் திகதியில் ஆரம்பித்ததுடன் 2019 யூன் 30 ஆந் திகதியளவில் முடிவுறுத்துவதற்கு பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் காலப்பகுதியானது 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்தது.

### 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத்

தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது
செயற்திட்ட நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | தாக்கம் | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளர் பரிந்துரை |
|---|---|---|---|---|
| 1987 03ஆம் இலக்க பொது ஒப்பந்தச்சட்டத்தின் பிரிவு 6 (01) இன் படி | ரூபா 5 மில்லியன் அல்லது அதற்கு மேற்பட்ட கிரயமுடைய ஒப்பந்தத்தை பெற்றுக்கொண்ட ஒப்பந்ததாரர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதிலிருந்து 60 நாட்களிற்குள் பொது ஒப்பந்த பதிவாளரிடம் பதிவுசெய்ய வேண்டும் மேலும் ஒப்பந்த உடன்படிக்கை பொது ஒப்பந்த பதிவாளரிடம் பதிவுசெய்யப்பட வேண்டும் எவ்வாறாயினும் கட்டுமான ஒப்பந்தத்தை பெற்றுக்கொண்ட ஒப்பந்ததாரர் தேவைப்பாட்டுடன் இணங்கியிருக்கவில்லை | ஒப்பந்ததாரரிற்கு எதிராக சட்டம்இ வரி தொடர்பாகநடவடிக்கை எடுக்க முடியாதிருக்கும் | சட்டத் தேவைப்பாட்டுடன் இணங்குவது தொடர்பாக ஒப்பந்ததாரருக்கு அறிவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்பது. | ஒப்பந்ததாரர் சட்டத் தேவைப்பாட்டுடன் இணங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட வேலைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்

நிகழ்ச்சித் திட்டத்தின் செயற்பாடகளாக Tranche – 3 இன் கழிவுநீர் முகாமைத்துவ முறைமை மீதான விபரமான வடிவமைப்புகள் மற்றும் கேள்வி மனுக்களை தயாரித்தல் மற்றும் அனுமதி பெறல் மற்றும் கொழும்பு நகர்பகுதியிலுள்ள 125 கீலோ மீற்றர் நீளமான கழிவு நீர் பாதையினை சுத்தம் அசய்தல் மற்றும் தரநிலைமைகளை மதிப்ீடு செய்தல் உள்ளன. எவ்வாறாயினும் நிகழ்சித்திட்டத்தின் நடவடிக்கைகள் அமுல்படுத்தப்பட்டதிலிருந்து தொடர்ந்தேர்ச்சியான அமுலாக்கல் திட்டம் எதனையும் கொண்டிருக்கவில்லை பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் நிகழ்சித்திட்டத்தின் நடவடிக்கைகள் அமுல்படுத்தப்பட்டதிலிருந்து 5 வருடங்களை கடந்தநிலையிலும் ரூபா 282.87 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 1.70 மில்லியன் மாத்திரமே 2019 திசெம்பர் 31 வரை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதில் ரூபா

1042.88 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 8 மில்லியனை கடன் முகவர் வழங்கியிருந்தது. கீழ்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| **உள்ளடக்கம்** | **கணக்காய்வு விடயம்** | **விளைவு** | **தாமதத்திற்கான காரணங்கள்ஷ** | **கணக்காய்வாளர் பரிந்துரை** |
|---|---|---|---|---|
| அ) ஆலோசகாட ஒப்பந்தம் | ஆலோசகர் ஒப்பந்தம் 25 ஏப்ரல் 2016 இல் ஆரம்பித்து 25 ஏப்பிரல் 2020இல் முடிவடைய திட்டமிடப்பட்டிருந்த போதும் 332 விதமான பௌதீக செயலாற்றல் மட்டுமே 31 டிசம்பர் 2019 இல் அடையப்பட்டிருந்தது . | அடைய எதிர்பார்க்கப்படும் இலக்கு நிகழ்ச்சித்திட்’டத்தின் காலப்பகுதியில் அடையப்படமாட்டாது. | தற்போபது மீள் மனுக்கோரலுக்கான கொள்ளல் நடைமுறைகள் நடைபெற்றுக்அகா ண்டிருக்கின்றன. மற்றும் செயற்றிட்டத்தின் காலத்தினை நீடிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக்கொ ண்டிருக்கின்றன. | நிகழ்ச்சித்திட்டத்தின் நீடிக்கப்பட்ட காலப்பகுதி முடிவடையமுன்னர் ஒப்பந்தத்தினை வழங்குவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். |
| ஆ) தரநிலைமைகளை மதிப்பீடு செய்தல், கழிவுநீர் பாதையினை சுத்தம் செய்தல் மற்றும் சீசீரீவி (CCTV) புலனாய்வு | சீசீரீவி (CCTV) தொழில்நுட்பத்தை பயன்படுத்தி கழிவுநீர் பாதையினை சுத்தம் செய்தலுக்கான மதிப்பீடு மற்றும் 108 கிலோமீற்றர் நீளமான கழிவுநீர் பாதைக்கான சொத்துத்தரவுத்தளத்தினை தயாரித்தல் போன்றன 01 யூலை 2016 இல் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது எவ்வாறாயினும், 2018 திசெம்பர் 31 வரை வழங்கப்பட்டிருக்கவில்லை | - Do - | இரண்டு தடவைகள் கேள்வி மனுக்கள் கோரப்பட்டது. ஆனால் இருதடவைகளும் தகுதிவாய்ந தஒப்பந்தகாரர்களை தெரிவுசெய்யமுடியவில்லை. | -Do - |

### 3.2 சுற்றாடல் தொடர்பான விடயங்கள்

| **கணக்காய்வு விடயம்** | **விளைவு** | **முகாமைத்துவ கருத்துரை** | **கணக்காய்வாளர் பரிந்துரை** |
|---|---|---|---|
| சுற்றாடல் அதிகாரி 22 ஒக்டோபர் 2018 இல் செயற்திட்டத்திலிருந்து விலகியுள்ளார்.கடன் ஒப்பந்தத்தின் அட்டவணை 5 இன் படி செயற்திட்டத்தின் சுற்றாடல் செயற்திறன் ஒழுங்காக | செயற்திட்டத்தின் வேலை தொடர்பான சுற்றாடல் மதிப்பீட்டு ஒழுங்கு முறையாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிகழ்ச்சித்திட்டத்தின் Tranche 2 ற்கு சுற்றாடல் அதிகாரி ஒதுக்கப்பட்டீருக் | சுற்றாடல் அதிகாரியினை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| கண்காணிப்புச் செய்யப்பட வேண்டும் அதன்மேலான அறிக்கைகள் ஆண்டிற்கு இருமுறை கடன் முகவருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் சுற்றாடல் கண்காணிப்பு அறிக்கை மற்றும் சூழல் பாதுகாப்பு கண்காணிப்பு அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவோ சமர்ப்பிக்கப்பட்டிருக்கவோ இல்லை. | கவில்லை. நிகழ்ச்சித்திட்த்தின் சுற்றாடல் நடவடிக்கைகள் நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவ அலகுடன் ஆலோசகர்களால் மேற்கொள்ளப்படகின்றது. |

### 3.3 மனிதவள முகாமைத்துவம் தொடர்பான விடயங்கள்

| | **தொழில் நிலைகள்** | **புதவிகளின் எண்ணிக்கை** | | | **விளைவு** | **முகாமைத்துவ கருத்துரை** | **கணக்காய்வாளர் பரிந்துரை** |
|---|---|---|---|---|---|---|---|
| | | **அனுமதிக்கப்பட்டது** | **2019 திசெம்பர் 31 இல் உண்மையான எண்ணிக்கை** | **வெற்றிடங்கள்** | | | |
| 01. | பிரதி செயற்றிட்ட நிர்வாகி | 02 | 01 | 01 | நிரப்பப்படாத 12 வெற்றிடம் காரணமாக செயற்றிட்டத்தின் தடையற்ற செயற்பாடு பாதிக்கப்படும் | அட்டவணையில் குறிப்பிட்டதன்படி ஒவ்வொரு செயற்றிட்டத்திற்கும் தனியான பதவி நிலைகள் இல்லை. செயற்றிட்டத்தின் அனைத்து செயற்பாடுகளும் கொழம்பு பெரும்பாக முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தினூடாகவும் (புஊறுறுஐஜீ) கொழும்பு பெரும்பாக கழிவுநீர்த் திட்டத்தினூடாகவுமே செயற்படுத்தப்படுகின்றது. | 12 வெற்றிடங்களையும் நிரப்புவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| 02.. | செயற்திட்ட பொறியியலாளர் (கொள்ளல்) | 01 | | 01 | | | |
| 03. | செயற்திட்ட பொறியியலாளர் | 10 | 07 | 03 | | | |
| 04. | சுற்றாடல் அலுவலர் | 01 | | 01 | | | |
| 05. | செயற்றிட்ட செயலாளர் I | 02 | 01 | 01 | | | |
| 06. | உதவி செயற்றிட்ட செயலாளர் II | 07 | 05 | 02 | | | |
| 07. | முகாமைத்துவ உதவியாளர் II | 05 | 03 | 02 | | | |
| 08. | முகாமைத்துவ உதவியாளர் I | 02 | 01 | 01 | | | |
| | | --- | --- | --- | | | |
| | | 30 | 18 | 12 | | | |
| | | === | == | == | | | |